பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
18 02 2026 WEDNESDAY 6 30 PM

## வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய வாய்ப்புகளை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- கோவை குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த திமுகவைச் சேர்ந்த திரு. தயாநிதி மாறன் மன்னிப்பு கோர வேண்டும் என்று பிஜேபியும், அஇஅதிமுகவும் வலியுறுத்தியுள்ளன.

- வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய வாய்ப்புகளை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஸ்பெயின் அதிபர் திரு Pedro Sanchez-சுடன் நடத்திய பேச்சுகளுக்குப் பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவது குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற்றதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பிற்கு இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேலும் வலுசேர்க்கும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்

>>>>><<<<<

புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதில் இந்தியா சாதனை படைத்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர். 2016ஆம் ஆண்டு 500 புத்தொழில் நிறுவனங்கள் மட்டுமே நாட்டில் செயல்பட்டு வந்ததாக குறிப்பிட்டார்.

தற்போது இந்த எண்ணிக்கை 2 லட்சத்தை தாண்டியுள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

>>>>><<<<<

மாற்று எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மாநாட்டில், சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பிற்கான அரங்கினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

கோவை குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த திமுகவைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் மன்னிப்பு கோர வேண்டும் என்று பிஜேபியும், அஇஅதிமுகவும் வலியுறுத்தியுள்ளன.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள சமூகவலைப் பதிவில், கோவை குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தது, திரு. தயாநிதி மாறனின் வன்மத்தையே வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கோவை மக்களை தரக்குறைவாக பேசியது கண்டனத்திற்குரியது என்றும் இதற்காக திரு. தயாநிதி மாறன் மன்னிப்பு கோர வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அஇஅதிமுகவின் தலைமைநிலையச் செயலாளர் திரு. எஸ்.பி. வேலுமணி வெளியிட்டுள்ள அறிக்கையில், நம்பி வந்த யாவருக்கும் கொடுத்தது கோவை என்பதே உண்மை வரலாறு என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மை இவ்வாறிருக்க கோவை மக்கள் கெடுத்தார்கள் என்று திரு. தயாநிதி மாறன் பேசியுள்ளது கண்டிக்கத்தக்கது என்று அவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

திமுகவுடனான தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுக்கள் வரும் 22ஆம் தேதி நடைபெறும் என்று தாம் நம்புவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி தொடர்பான பேச்சுகள் சுமுகமாக நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

உதவித்தொகையை உயர்த்தக் கோரி போராடிய மாற்றுத் திறனாளிகள் மீது, காவல்துறையினர் நடத்திய தாக்குதல் கண்டனத்திற்குரியது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த தாக்குதலில் திமுக கூட்டணியில அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் திரு. கே.பாலகிருஷ்ணனின் மனைவி உட்பட பலர் காயமடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. தினகரன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகமும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில். இப்பிரச்சினைக்கு தீர்வு காண, சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களை முதலமைச்சர் அழைத்துப் பேச வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாசும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போராட்டம் நடத்திய மாற்றுத் திறனாளிகளை கைது செய்து, கொடுமைப்படுத்துவது ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

அடக்குமுறையின் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்து, அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

>>>>><<<<<

பழங்குடியின இளையோர் பரிமாற்ற நிகழ்ச்சி, காஞ்சிபுரம் மாவட்டம் ஏனாத்தூரில் உள்ள கல்லூரியில் நாளை மறுநாள் தொடங்கவுள்ளதாக மை பாரத் மாநில இயக்குநர் திரு. செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், மாநில ஆளுநர் திரு. ஆர். என். ரவி இதனை தொடங்கி வைக்கவுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தில்குமார் 46 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நாமக்கல்லில் மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா இன்று நடைபெற்றது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கண்ணன் 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக தென் தமிழகம் மற்றும் மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வடதமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், சட்டப்பேரவை தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பயிற்சி கருத்தரங்கம், ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

கடலூரில் போதைப்பொருள் தீமை குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருப்பத்தூரில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம், மாவட்ட கண்காணிப்பாளர் திருமதி. சியாமளா தேவி தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, தமிழக கேரள எல்லைப்பகுதியில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, இரு மாநில அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இன்று கோவையில் நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - நெதர்லாந்து இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

அஹமதாபாதில் நடைபெற்றவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

>>>>><<<<<

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

Ishan Kishan, 8வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Himanshu Desai, Srivarshan Mahendren மற்றும் Muskan Sangwan முதலாவது தகுதிச் சுற்று ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.

>>>>><<<<<

Hobart-ல் நடைபெறவுள்ள புரோ லீக் ஹாக்கிப்போட்டிக்கான 24 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் Angad Bir Singh-க்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

>>>>>END<<<<<